மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் யோசனை நினைவில் கொள்ளப்பட்டு உரிய நேரத்தில் ஆவன செய்யப் படும்.

திரு. கு. காமாட்சி : தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர் களுக்குப் பங்கு தரப்பட வேண்டுமென்பது நியாயம். அதே போல் தொழிற்சங்கங்களில் தொழிலாளர்களே தலைவர்களாக இருக்க வேண்டுமென்ற நிலை பற்றி அரசிடம் பரிசிலனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே இந்தக் கருத்தை முதல்வர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஒரு சில தொழிற் சாலைகளில் அப்படி தொழிலாளர்களே தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்து நடத்தி வருகிறார்கள்.

Mechanical driers in Thanjavur District.

* 721 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Food Corporation of India proposes to dismantle the driers in Thanjavur district; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மேலும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதற்காக, உலர்த்தி இயந்திரங்கள் Mechanical driers ஏழினை வேறிடங்களுக்கு மாற்ற இந்திய உணவுக் கழகம் கருதியுள்ளது. இவற்றில் 3 மாடர்ன் ரைஸ் மில்ஸ் உள்ள சிதம்பரம், தஞ்சாவூர், செம்பனார்கோவில் ஆகியவிடங்களிலும் காரைக்காலி லுள்ள சியாத்தமங்கையில் ஒன்றும் அமைக்கப்படவிருக்கின்றன. பிற 3 இயந்திரங்கள் அமைக்கப்படுவதற்கான இடங்கள் பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

(இ) இருக்கின்ற இயந்திரங்களை இயன்றவரை சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதற்காக இந்திய உணவுக் கழகம் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாலும், ஆலையின் திறனை மேம்படுத்து வதற்காக இப்பிரிவுகளில் சில, மாநிலத்திற்குள்ளேயே அமைக்கப்பட விருப்பதாலும் அரசின் நடவடிக்கைகளுக்கான அவசியமில்லை.

1972 மார்ச் 27]

திரு. கே. டி. கே. தங்கமணி : தஞ்சையில் இருக்கக்கூடிய இந்த மிகப் பெரிய உலர வைக்கும் ராட்சச இயந்திரங்கள் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா அதைப் பயன்படுத்தாவிட்டால் அதை நாம் பயன்படுத்தும் வகையில் பெற்றுக்கொள்ள அவர்களை அணுக முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த இயந்திரங்கள் ஈரம் உலத்துவதற்காக அமைக்கப்பட்டவை. குறுவை அறுவடையின் போதுதான் பயன்பட முடியும். இந்த ஆண்டு குறுவை அறுவடையின்போது மழையே பெய்யவில்லை. முந்தைய ஆண்டும் இது முழு அளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : அந்த ட்ரையரில் ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது எப்படி ஆரம்பிக்கப் பட்டது ? பைலட் ஸ்கீமாக ஆரம்பிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த இயந்திரம் ஈரத்தை உலர வைக்கும் இயந்திரம். இது முழு அளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று வேறு சில இடங்களுக்கு மாற்றுகிறார்கள். இதைச் செய்வது ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா. நஷ்டத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் கணக்குக் கிடையாது.

திரு. என். கிட்டப்பா : இந்த ஈரம் உலர்த்தி இயந்திரங்களில் அதிகமான நெல்லை ஒரே நேரத்தில் கொட்டினால்தான் உலர வைக்க முடியும் என்ற நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கொள் அளவிற்குச் கொஞ்சம் குறைவாக இருக்குமானால் அதிகமாக நடுத்தர விவசாயிகள் பயன் அடைய வசதியாக இருக்குமென்று நம்பப்படுவதால் அது குறித்து மாற்று யோசனையை அரசாங்கம் தொடர்புடைய கழகத்தினிடம் அறிவிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஈரம் உலர்த்தும் இயந்திரங்களில் எவ்வளவு கொட்டினால் ஈரத்தை உலர்த்த முடியும் என்று இருக்கிறதோ அந்த அளவிற்குக் கொட்டாமல் குறைவாகக் கொட்டினால்தான் அல்லது குறைவாக உபயோகப்படுத்தினால் பெரும் நஷ்டம் ஏற்படும். ஆகவே, அதை ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் முறையில் மினி ட்ரையர்ஸ் போடுவதைப் பற்றி வேண்டுமானால் அதைப்பற்றி விசாரித்துப் பார்க்கலாம்.

[1972 மார்ச் 27

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : எஞ்சியுள்ள இந்த மூன்று ஈரம் உலர்த்தும் இயந்திரங்களில் ஒன்றை திருச்சி மாவட்டத்தில் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மாற்றுகிற விஷயம். நமக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. உறுப்பினர் அவர்கள் எங்கே வைக்க வேண்டுமென்று யோசனை சொல்வார்களானால் அதைப்பற்றிப் பரிசீலித்து பரிந்துரை செய்யலாம்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : இந்த ஈரம் உலர்த்தும் இயந்திரத்தில் போடும் நெல் முதலில் அதிக வெப்பம் அடைந்து சோறு போல் ஆகிவிடுகிறது. பின் அவித்து அரைக்கும்போது பொடிந்து விடுகிறது. ஆகவே அதனால் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதற்கு ஏதாவது பரிகாரம் காண்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து சரியான கருத்து அல்ல.

Retail price of rice in Madras.

* 722. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that retail price of rice in Madras City and districts has gone up since November 1971 ;

(*b*) if so, the steps taken to bring down the price ; and

(*c*) the result of such action, if any taken?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1971 நவம்பரில் அரிசியின் சில்லறை விலை உயர்ந்தது. ஆனால், 1972 ஜனவரியில் முக்கிய அறுவடை தொடங்கியதிலிருந்து பெரும்பாலான விற்பனை இடங்களில் விலைச் சரிவு ஏற்பட்டுள்ளது.

(ஆ) & (இ) அவசியம் ஏற்படும் பொழுதெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், அரசு இருப்பிலிருந்து கட்டுப்படியாகக் கூடிய விலையில் அரிசியை விற்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. சென்னையிலும், கோவையிலும் ஈடு